**கவனிக்க.-** *2019.03.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2115 - 2019 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2019.03.15

*2115ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | தென் மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | வட மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| வட மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 74 |


**கவனிக்க.-** (i) தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, ஏப்பிறல் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 22ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*


*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

73- B 81504 - 353 (2019/03)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/50955.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : இகோ/இ/19/தீ.ப./நியா/282.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், நியாகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 38B, நியாகம (தெற்கு) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நியாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் F.V.P. -600 எனும் வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 162 எனக் காட்டப்பட்டுள்ளதும், சுமார் 12 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சமிதி நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு நியாகம சனச அமைப்புச் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : திரு. K.M.G. தம்மிக அநுர குமார என்பவருடைய காணி;
கிழக்கு : திரு. K.L.G. நந்தசேன என்பவருடைய காணி;
தெற்கு : கெரவெ வயல் நிலம்;
மேற்கு : பிரதான வீதி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.** -முப்பது (30) வருடங்கள் (2018.07.17 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை.**-பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2018 ஆம் ஆண்டுக்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சமிதி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2018.09.07 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக் கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.03.15.

3- 845

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/ 37268.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :இகோ/14/தீ.ப./நெலு/08/226.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், நெலுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 231 D, மெதகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மெதகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் GA/ NLW/ 98/34 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்பட்டுள்ளதும், சுமார் 0.056 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சமிதி நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் மெதகம எக்ஷத் அவமங்கல்யாதார சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : மரபியல் நிலம்;
கிழக்கு : நடைபாதை மற்றும் G.G. சோமாவதி அவர்களின் காணி;
தெற்கு : G.G. சோமாவதி அவர்களின் வதிவிடக் காணி;
மேற்கு :மெதகம ஸ்ரீ சுமேதாராமய அமைந்துள்ள காணி.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**. -ஐந்து (05) வருடங்கள் (2017.12.22ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி );

**வருடாந்தக் குத்தகை**.-பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2017 ஆம் ஆண்டுக்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சமிதி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேசச் செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.12.22ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக் கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.03.15.

3- 688

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/ 55049.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : DO 01/ NUG/ LTL/13

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தளை மாவட்டம், வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பத்கம்பள கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பத்கம்பள எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்.ஜே.பி.மா. 08 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 340 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 39.8 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 343 மற்றும் 347;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 342;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 342 மற்றும் 341;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 252.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**. - ( 2019.01.03 ஆம் திகதி தொடக்கம் முப்பது (30) வருடங்கள் முன்னோக்கி;

**வருடாந்தக் குத்தகை**.-குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான காணியின் விலை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு ( ரூபா 5, 000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டின்

அடிப்படையில் குறித்த வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியில் 2 % குத்தகை செயற்படுத்தப் படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூபா5,000,000.00) மேற்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் , பிரதான விலைமதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 4% குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இந்த வருடாந்தக் குத்தகை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக் கப்பட்ட வருடாந்தக் குத்தகைப் பணம் நேர்முன் கடந்து ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட குத்தகைப் பணத்தில் 20 % கூட்டி வருடாந்தக் குத்தகையாக அறவிடப்படும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி அலுவலகப் பொறுப்பு அதிகாரியின் உத்தியோக வதிவிடம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதான காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2019.01.03 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும் கீழ்க்குத்தகைக்கு அனுமதிக்கப்படமாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.03.15.

3-689

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.